<u>சாதாரணக் கூட்டம்</u>

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி சாதாரணக் கூட்டம் 31.10.2023ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட உள்ளதால், துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>முன்னிலை :-</u>

1. **திரு.அ.அறிவரசு** அவர்கள், தலைவர், கூடலூர் நகராட்சி
2. **திரு.சி.மனோகரன்** அவர்கள், ஆணையாளர்(கூ.பொ), கூடலூர் நகராட்சி

<u>**பொருள் எண்**:01</u>

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 அம்ரூட் 2.0 (2022-23) திட்டத்தின் கீழ் பாலாஜி நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பூங்காவில் கூடுதலாக பேவர் பிளாக், செயற்கை நீரூற்று, சிமெண்ட் பூச்சு மற்றும் வண்ணப்பூச்சு ஆகிய பணிகளை ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**பொருள் எண்**:02</u>

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 பழையபுதூர் பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் பொதுக்கழிப்பிடத்திற்கு முன்புற தோற்றப் பணிகளை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**பொருள் எண்**:03</u>

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 ஸ்ரீ பாரதி நகர் பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் பொதுக்கழிப்பிடத்திற்கு முன்புற தோற்றப் பணிகளை ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**பொருள் எண்**:04</u>

கூடலூர் நகராட்சியில் பொதுப்பிரிவில் புதியதாக அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதால், அலுவலர்களுக்குத் தேவையான கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:05</u>**

கூடலூர் நகராட்சியில் வருவாய் பிரிவில் புதியதாக அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதால், அலுவலர்களுக்குத் தேவையான கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.5.50 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:06</u>**

கூடலூர் நகராட்சியில் அலுவலகப் பயன்பாட்டிற்குத் தேவையான வண்ண பிரிண்டர்கள் மற்றும் டோனர்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.8.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:07</u>**

கூடலூர் நகராட்சியில் புதியதாக அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாலும், போதுமான இருக்கை வசதி இல்லாததாலும், அலுவலர்களுக்குத் தேவையான மேஜை, நாற்காலி, மற்றும் பீரோ ஆகியன கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.97,000/- (தொண்ணூற்று ஏழாயிரம்) நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால், இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதற்கும் மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:08</u>**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 நந்தினி காலனி பகுதியில் கோவில் அருகில் பேவர் பிளாக் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 6.00 | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 0.03% குறைவு |
| | | | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 1.10 % அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாருக்கு இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:09**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் பணிகள் மேற்கொள்ள 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எ ண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27 கே.எஸ்.பி பப்ம்ஸ் அருகில் உள்ள கௌசிகா நதிக்கு கம்பி வேலி அமைத்தல் மற்றும் CCTV கேமரா பொருத்துதல். | 9.60 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.03% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.20% அதிகம் |
| 2. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 திருமலைநாயக்கன்பாளையம் ரேசன் கடை எதிரில் சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் கல்வெட்டு சிலேப் அமைத்தல், வார்டு எண்.16 அண்ணா நகர் சந்திப்பு, வார்டு எண்.15 திருவள்ளுவர் பூங்கா அருகில், வார்டு எண்.24 ரேசன் கடை அருகில், வார்டு எண்.17 பாரதி நகர் மற்றும் வார்டு எண்.04 சீனிவாச நகர், வார்டு எண் 09 அங்காளம்மன் நகர் ஆகிய பகுதிகளில் வடிகால் சீரமைத்தல், வார்டு எண்.14 எஸ்.ஆர். நகர் மற்றும் வார்டு எண்.12 கணேசபுரம் ஆகிய பகுதிகளில் கல்வெட்டு சிலேப் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல். | 6.00 | திரு.ஞானம், ஒப்பந்ததாரர் | 0.04% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.00% அதிகம் |
| 3. | கூடலூர் நகராட்சியில் வார்டு எண்.27 தெக்குப்பாளையம் மெயின்சாலை முதல் ஏ.வி.பி பள்ளி வரை தார்சாலை புதுப்பித்தல். | 8.20 | திரு.எஸ்.விஜய குமார், ஒப்பந்ததாரர் | 0.06% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.10% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 சாமையன் நகர் மற்றும் டி.ஆர்.டி நகர் ஆகிய பகுதிகளில் DBM தார்சாலை பணி மேற்கொள்ளுதல். | 8.00 | திரு.எஸ்.விஜய குமார், ஒப்பந்ததாரர் | 0.03% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.20% அதிகம் |
| 5. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நகராட்சிக்குச் சொந்தமான Reserve Site பகுதிகளில் கம்பிவேலி அமைத்தல், நுழைவாயில் அமைத்தல் மற்றும் மராமரத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 5.00 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.05% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.30% அதிகம் |
| 6. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07 அம்பேத்கார் நகர் சமுதாயக் கழிப்பிடத்திற்கு முன்புறம் மற்றும் மேற்குப்புற பகுதிகளில் பேவர் பிளாக் அமைத்தல். | 3.60 | திரு.எஸ்.விஜய குமார், ஒப்பந்ததாரர் | 0.04% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.10% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:10</u>**

கூடலூர் நகராட்சியில் குடிநீர்நிதி 2023-24ன் கீழ் பணிகள் மேற்கொள்ள 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | **பணி விபரம்** | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | **ஒப்பந்ததாரர் பெயர்** | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 பகுதியில் பாலாஜி நகர் மெயின் ரோடு மற்றும் அண்ணா நகர் முதல் அக்ஷயா கார்டன் வரை குடிநீர் பகிர்மானக்குழாய் விஸ்தரிப்பு செய்தல். | 2.40 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.04% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.30% அதிகம் |
| 2. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 ஸ்ரீ பாரதி நகர் வடக்கு பகுதியில் குடிநீர் | 9.60 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.05% **குறைவு** |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகிர்மானக்குழாய் விஸ்தரிப்பு செய்து குடிநீர் வசதி செய்தல். | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.20% அதிகம் |
| 3. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 ஸ்ரீ பாரதி நகர் தெற்கு பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் விஸ்தரிப்பு செய்து குடிநீர் வசதி செய்தல். | 9.70 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.03% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.20% அதிகம் |
| 4. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கோவை – மேட்டுப்பாளையம் சாலையில் கௌசிகா நதி பாலம் முதல் தபால் தந்தி காலனி வரை குடிநீர்க் குழாய் அமைத்தல். | 5.10 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.06% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.30% அதிகம் |
| 5. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 பிரிக்கால் நகர் மற்றும் அண்ணா நகர் தோட்டப்பகுதி வழியில் குடிநீர்க்குழாய் விஸ்தரித்தல். | 3.40 | திரு.மா.செபஸ்தி ராஜ், ஒப்பந்ததாரர் | 0.04% **குறைவு** |
| | | | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.40% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததார்களுக்கு, இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:11**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் பணிகள் மேற்கொள்ள 19.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 ஸ்ரீ பாரதி நகர் வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 9.80 | திரு.வ.முருகேசன், ஒப்பந்ததாரர் | 0.04% **குறைவு** |
| | | | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 1.30% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 ஸ்ரீ பாரதி நகர் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 9.80 | திரு.வ.முருகேசன், ஒப்பந்ததாரர் | 0.05% **குறைவு** |
| | | | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 1.00% அதிகம் |
| 3. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 ஸ்ரீ பாரதி நகர் மத்திய பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 9.70 | திரு.வ.முருகேசன், ஒப்பந்ததாரர் | 0.03% **குறைவு** |
| | | | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 1.20 % அதிகம் |
| 4. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 02 மகாலட்சுமி கார்டன் முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 9.00 | திரு.பி.கே.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர் | 0.06% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.20% அதிகம் |
| 5. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 02 மகாலட்சுமி கார்டன் பிரதான சாலை மற்றும் மூன்றாவது குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 9.00 | திரு.பி.கே.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் | 0.03% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.30% அதிகம் |
| 6. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 அம்பேத்கார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 4.80 | திருமதி.ச.கிருஷ்ண வேணி, ஒப்பந்ததாரர் | 0.06% **குறைவு** |
| | | | திரு.ஞானம், ஒப்பந்ததாரர் | 1.30% அதிகம் |
| 7. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 அம்பேத்கார் நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 5.00 | திருமதி.ச.கிருஷ்ண வேணி, ஒப்பந்ததாரர் | 0.02% **குறைவு** |
| | | | திரு.ஞானம், ஒப்பந்ததாரர் | 1.20% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:12**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 மாகாளியம்மன் நகர் அண்ணா நகர் மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

.பொருள் எண்:13

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 மாகாளியம்மன் நகர் பகுதியில் உள்ள குறுக்கு சாலைகளில் போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள் எண்:14

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 மாகாளியம்மன் நகர் பகுதியில் உள்ள குறுக்கு சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள் எண்:15

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 காமராஜ் நகர் பகுதியில் போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.9.10 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள் எண்:16

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 தெக்குப்பாளையம் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்திற்கு புதியதாக CCTV கேமரா பொருத்துவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.10,000/- பொதுநிதியில் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

பொருள் எண்:17

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 தெக்குப்பாளையம் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்திற்கு புதியதாக CCTV கேமரா பொருத்துவதற்கு 20.10.2023 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணி விபரம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | சென்சுரி இன்போ டெக் | அக்னி மைக்ரோ டெக் | பேட்ரோல் டெக் சொலியூசன் |
| 1. | வார்டு எண்.26 தெக்குப்பாளையம் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்தில் CCTV கேமரா பொருத்துதல். | 10800 | 10620 | 9865 |

மேற்காணும் விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **பேட்ரோல் டெக் சொலியூசன்** என்ற நிறுவனத்திற்கு, இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>பொருள் எண்:18</u>

கூடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப் பயன்பாட்டில் உள்ள தள்ளுவண்டிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>பொருள் எண்:19</u>

கூடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப் பயன்பாட்டில் உள்ள தள்ளுவண்டிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 22.06.2023 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணி விபரம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | ஐ.வி.டெக் எக்யுப்மெண்ட்ஸ் | விஜயா எஞ்சினியரிங் | சிவராம் எக்யுப்மெண்ட்ஸ் |
| 1. | கூடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப் பயன்பாட்டில் உள்ள தள்ளுவண்டிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 125272/- | 1,32,384/- | 1,34,176/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஐ.வி.டெக் எக்யுப்மெண்ட்ஸ்**, **கோவை** என்ற நிறுவனத்திற்கு, இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>பொருள் எண்:20</u>

கூடலூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2023-24 (Tied Grant) நிதியின் கீழ் 10 பேட்டரி வாகனங்கள் (BOV) மற்றும் 2 இலகுரக வாகனங்களை (LCV) கொள்முதல் செய்ய 15.09.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்கு 10 எண்ணிக்கையிலான BOV வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணி. | 19.75 | தி/வா. வலம்புரி இண்டஸ்ட்ரீஸ், கோவை | **0.02% குறைவு** |
| | | | தி/வா என்.எ.சி இண்டஸ்ட்ரீஸ், நாமக்கல் | 5.26% அதிகம் |
| 2 | கூடலூர் நகராட்சிக்கு 2 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் (LCV) வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணி. | 14.60 | தி/வா. லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | 0.01% **குறைவு** |
| | | | தி/வா மணி மோட்டார்ஸ் அண்ட் டிரேடர்ஸ், மேட்டூர் | 4.79% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததார்களுக்கு பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்மைக்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:21**

கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம்(ந) 2.0ன் கீழ் கழிவுநீர் ஊர்தி (Cesspool Tanker) கொள்முதல் செய்ய 16.10.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்கு கழிவுநீர் ஊர்தி கொள்முதல் செய்தல். | 43.25 | M/s. ABT Industries limited, Madurai | 0.01% குறைவு |
| | | | M/s. A.S.R. Body Works, Madurai | மதிப்பீட்டு விலை |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ABT Industries limited, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்மைக்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:22**

கூடலூர் நகராட்சியில் SUIDF -2022-23 திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள குழல் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றும் பணியை மேற்கொள்ள 10.04.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குழல் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைத்தல். | 1.35 | M/s. V Best Engineers, Trichy | மதிப்பீட்டு விலை |
| | | | 2) M/s. Sabari Electricals, Chennai | 9.00% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. V Best Engineers, Trichy என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்மைக்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:23</u>**

கூடலூர் நகராட்சியில் 2023-24ஆம் ஆண்டில் அலுவலகப் பயன்பாட்டிற்குத் தேவையான பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.7.00 இலட்சத்தில் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:24</u>**

கூடலூர் நகராட்சியில் SUIDF திட்டத்தின் கீழ் வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் ஏற்கனவே உள்ள குழல் விளக்குகளை, LED விளக்குகளாக மாற்றும் பணியை ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை TUFIDCO நிறுவனத்திடம் கடனாக பெற்று பணியை மேற்கொள்ள நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றமைக்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:25</u>**

20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 29.02.2024 வரை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.118, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (ந.வ.4(1)), நாள்.04.09.2023-இன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:26</u>**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் தெருவிளக்குகள் அமைக்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | இடம் | பணி விபரம் |
|---|---|---|---|
| 1. | 17 | வெங்கடேசலு நகர் | 4 எண்ணிக்கையில் உள்ள மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் ஒரு மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 2. | 17 | பீகாக் அவென்யூ | ஒரு எண்ணிக்கையில் உள்ள மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் 2 மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 3. | 17 | அன்னை நகர் | 1 மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 4. | 8 | அண்ணா நகர் தோட்டப்பகுதி | 8 எண்ணிக்கையில் உள்ள மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல் . |

<u>பொருள் எண்:27</u>

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் 11 இடங்களில் நீர் அளவுமானி பொருத்துதல் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.4.00 இலட்சம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. ராவுத்தக்கொல்லனூர்
2. கணேஷ் நகர்
3. தெக்குப்பாளையம் – பெரிநாயக்கன்பாளையம் மெயின் சாலை
4. விவேகானந்தா நகர்
5. தபால் தந்தி காலனி
6. தெக்குப்பாளையம்
7. சாமிசெட்டிபாளையம்
8. கவுண்டம்பாளையம்
9. செல்வபுரம்
10. மாணிக்கவாசக நகர்
11. அண்ணா நகர்

**பொருள் எண்:28**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிகளிலும் குடிநீரின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருப்பதால், அதற்காகும் தோராய செலவினம் ரூ.60,000/- நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:29**

கூடலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் முதிர் கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ள போதிய புகைமருந்து அடிக்கும் கருவி பயன்பாட்டில் இல்லாததால், தேவைப்படும் Hand Fogging – 5 எண்ணம், Pulse Fogging – 2 எண்ணம், Vehicle Mountain – 1 எண்ணம் புகை அடிக்கும் கருவியினை பொதுசுகாதாரத்தின் அவசியம் கருதி வாங்கி வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,80,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:30**

கூடலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் சாலைகளின் இருபுறங்களிலும் உள்ள செடிகள் மற்றும் கொடிகளை வெட்டி அகற்றுவதற்கு, புல் கட்டிங் கருவி – 2எண்ணம் தேவைப்படுவதால், பொதுசுகாதாரத்தின் அவசியம் கருதி வாங்கி வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:31**

கூடலூர் நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகள் உள்ளது. இதில் குடிநீர் இணைப்புகள் மொத்தம் 12639 உள்ளது. இந்நகராட்சிக்கு நல்ல தண்ணீர் மற்றும் உப்புத்தண்ணீர் அனைத்து இணைப்புகளுக்கும் வழங்கப்பட்டு வரும் நிலையில், தவறுதலாக 459 குடிநீர் இணைப்புகளுக்கு மட்டும், நல்ல தண்ணீருக்கு ஆண்டுக்கு ரூ.1800/- என்றும் உப்புத்தண்ணீருக்கு ரூ.240/- என இரு கேட்பாக கணினி வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 459 குடிநீர் இணைப்புதாரர்கள் மற்ற குடிநீர் இணைப்புகள் போல் எங்களுக்கும் ஆண்டுக்கு ரூ.1800/- வீதம் மாற்றி வழங்கிட கோரி, நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் வாயிலாக கோரிக்கை வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட 459 குடிநீர் இணைப்புகள், ஒரு வீட்டிற்கு ஒரு குடிநீர் இணைப்பிற்கு இருமுறை கேட்பு எழுப்பப்பட்டதை, கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:32**

கூடலூர் நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம், 07.12.2021ஆம் தேதி முதல் பேரூராட்சியிருந்து தரம் உயர்த்தப்பட்டு, இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 27

வார்டுகளை உள்ளடக்கியதாகவும், 29.98 சதுர கி.மீ பரப்பளவும் கொண்டதாகவும், 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 38859 கொண்டதாகவும், தற்போதைய மக்கள் தொகை உத்தேசமாக 52842 உள்ளது. மேலும், சுமார் 15000 குடியிருப்புகளும், 600 வணிகம் மற்றும் தொழிற்சாலைகளும் உள்ளது. இந்நகராட்சிக்கு பில்லூர் – அத்திக்கடவு கூட்டு குடிநீர்த் திட்டத்தின் மூலம் 5.5 MLD குடிநீர் விநியோகம், நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 104 LPCD வழங்கப்பட்டு வருகிறது.

கூடலூர் நகராட்சியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து வெளியேறும் கழிவுகளை சுத்திகரிக்க, நகராட்சியிலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ள பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திக்கரிக்கப்பட்டு வருகிறது. தற்போது, கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 ஸ்ரீ பாரதி நகர் செல்லும் சாலைக்கு மேற்குப்புறம் உள்ள க.ச.எண்.846/4ல் வருவாய்த் துறைக்குச் சொந்தமான தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தில் புதியதாக கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்</u>**:33

கூடலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை மேற்கொள்ள 10 நபர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1 நாள் ஊதியம் ரூ.350/- என பொது நிதியில் இருந்து வழங்கப்பட்டு வருவதையும், மேலும் இப்பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ளவும் ஊதியமாக 1 நாளுக்கு 1 நபருக்கு ரூ.350/- பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்</u>**:34

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 குறள் நகர் முதல் குறுக்கு சாலையில் போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்</u>**:35

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 குறள் நகர் இரண்டாம் குறுக்கு சாலையில் போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.9.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்**:36

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 குறள் நகர் கிழக்கு பகுதியில் போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.9.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்**:37

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 சாமிசெட்டிபாளையம் இரட்டை பைப் வீதி பகுதியில் மழைநீர் வடிகால் சீரமைத்தல் மற்றும் சாமிசெட்டிபாளையம் நகராட்சி பள்ளி அருகிலுள்ள மண்சாலையில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்**:38

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ரோஸ் பார்க் அவென்யூ முதல் வீதியில் மழைநீர் செல்ல போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் நகரின் பகுதிகளில் ஆங்காங்கே தேங்கி விடுகிறது. எனவே, அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.9.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்**:39

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ரோஸ் பார்க் அவென்யூ குறுக்கு தெருவில் மழைநீர் வெளியேற போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.9.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்**:40

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 ஜி.டி ரெசிடென்சி பகுதிகளில் மழைநீர் வெளியேற போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, மேற்குறிப்பிட்ட பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:41**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 செல்வபுரம் மெயின்ரோடு வடக்குப் பகுதி முதல் ரேசன் கடை வரை மழைநீர் செல்ல போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.7.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:42**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 செல்வபுரம் மெயின்ரோடு ரேசன் கடை முதல் பட்டத்தரசியம்மன் கோவில் வரை மழைநீர் வெளியேற போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.7.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:43**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 செல்வபுரம் வடக்கு பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:44**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 விஜயலட்சுமி நகர் பிரதான சாலைகளில் மழைநீர் செல்வதற்கு போதிய வடிகால் வசதி இல்லாததால், மழைநீர் ஆங்காங்கே தேங்கிவிடுகிறது. எனவே, அப்பகுதியில் பொதுமக்களின் நலன்கருதி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:45**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 முல்லை நகர் குறுக்கு தெருக்களில் போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.9.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:46**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 தெக்குப்பாளையம் பகுதியில் நகர்ப்புற நல்வாழ்வு மையம் முன்புறம் மேற்கூரை மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:47**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 வட்டப்பாறைப்புதூர் வடக்குப் பகுதி பிரதான சாலையில் மழைநீர் வெளியேற போதிய மழைநீர் வடிகால் இல்லாததால், மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.8.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:48**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 செல்வபுரம் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குக்றையை சரிசெய்யும் பொருட்டு, அப்பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து பகிர்மான குழாய் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:49**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 27 முடிய உள்ள வார்டுகளில் ஆழ்குழாய் கிணறுகளில் மின் மோட்டார் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பேனல் போர்டுகளை மாற்றியமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:50**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளிலும் உள்ள குடிநீரின் அளவை தானியங்கி குடிநீர் மேலாண்மை கட்டுப்பாட்டுக் கருவிகளைக்கொண்டு கைபேசியில் செயலி மூலம் கண்காணிக்க, தானியங்கி குடிநீர் மேலாண்மை கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.7.80

இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:51**

கூடலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் கிருமி நாசினிகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் நீர்த்த சுண்ணாம்புத் தூள், பிளிச்சிங் பவுடர் மற்றும் சமுதாயக் கழிப்பறைகளை தூய்மைப் படுத்தும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பினாயில் மற்றும் சோப்பு ஆயில், ஆசிட் தற்போது இருப்பு குறைவாக இருப்பதால், பொதுசுகாதார நலன் கருதி கீழ்க்கண்ட பொருள்களை வாங்கி வழங்கிடவும் மேலும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4,50,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பொருட்கள் விபரம் | அளவு |
|---|---|---|
| 1. | பிளிச்சிங் பவுடர் | 3000 கிகி |
| 2. | சுண்ணாம்புத் தூள் | 5000 கிகி |
| 3. | சோப்பு ஆயில் (லெமன்கிராஸ் வாசைன) | 200 லிட்டர் |
| 4. | கழிவறை தூய்மை செய்யும் ஆசிட் | 200 லிட்டர் |
| 5. | பினாயில் (வாசனை) | 200 லிட்டர் |

**பொருள் எண்:52**

கூடலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் பணி மேற்கொள்ள 27.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சி அலுவலகக் கட்டிடத்தின் முதல் தளத்தில் மன்ற கூட்ட அரங்கில் Fall ceiling, மர மேசைகள், | 9.50 | கனலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 0.01% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாற்காலிகள் மற்றும் மின் பணிகள் மேற்கொள்ளுதல். | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.58 % அதிகம் |
| 2. | கூடலூர் நகராட்சி அலுவலகக் கட்டிடத்தின் முதல் தளத்தில் மன்ற கூட்ட அரங்கிற்கு முன்புற வடிவமைப்பு (Front Elevation) அமைத்தல், முன்பக்கம் கண்ணாடி அமைத்து, Terracotta பணிகள், பிளம்பிங் பணிகள் மேற்கொள்ளுதல். | 6.00 | கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | 0.03% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.07 % அதிகம் |
| 3. | பகவான் கார்டன்லிருந்து ஜனனி கார்டன் செல்லும் வழியில் தார்சாலை அமைத்தல். | 7.50 | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 0.12% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.26 % அதிகம் |
| 4. | வார்டு எண்.5 குப்புசாமி நகர் பூங்காவில் புல்தரை மற்றும் வண்ணப்பூச்செடிகள் அமைத்தல். | 4.50 | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 0.32% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.38 % அதிகம் |
| 5. | வார்டு எண்.6 கற்பூர நகர் விநாயகர் கோவில் முதல் திருமலைநாயக்கன்பாளையம் வரை பழுதடைந்த சாலைகளுக்கு Wetmix அமைத்தல். | 4.00 | திரு.எஸ்.விஜயகுமார், ஒப்பந்ததாரர் | 0.45% **குறைவு** |
| | | | திருமதி.எம்.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.20 % அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததார்களுக்கு இப்பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்</u>**:53

கூடலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தளவாடாப் பொருட்கள் தற்போது இருப்பு இல்லாதக் காரணத்தினால் தூய்மைப் பணிகள் மற்றும் சாக்கடைத் தூர்வாரும் பணிகளில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளதால், பொதுசுகாதார நலன் கருதி கீழ்க்கண்ட பொருள்களை வாங்கி வழங்கிடவும் மேலும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பொருட்கள் விபரம் | அளவு |
|---|---|---|
| 1. | மண் வெட்டி | 30 எண்ணம் |
| 2. | தெரு கூட்டும் சீமார் | 30 எண்ணம் |
| 3. | தென்னை கூட்டு மார் | 50 எண்ணம் |
| 4. | அரிவாள்(வெட்டு) | 20 எண்ணம் |
| 5. | புல் அரிவாள் | 30 எண்ணம் |
| 6. | சாக்கடை அகற்றும் கரண்டி | 50 எண்ணம் |
| 7. | கடப்பாறை | 6 எண்ணம் |
| 8. | பிக்காசு | 3 எண்ணம் |
| 9. | களைக்கொத்து | 30 எண்ணம் |
| 10. | முள் கம்பி ( 4 பல் கொண்டது) | 30 எண்ணம் |
| 11. | முள் கம்பி ( 5 பல் கொண்டது) | 30 எண்ணம் |
| 12. | அலுமினியக் கூடை | 30 எண்ணம் |
| 13. | இரும்பு சட்டி | 30 எண்ணம் |
| 14. | அலுவலகக் கூட்டு சீமார் | 10 எண்ணம் |
| 15. | ஒட்டடை குச்சி | 5 எண்ணம் |
| 16. | பாத்ரூம் கிளினிங் பிரஸ் | 10 எண்ணம் |
| 17. | கம்பூட்ஸ் | 50 எண்ணம் |
| 18. | கழிவறை தூய்மைப் படுத்த ரப்பர் கையுறை | 30 எண்ணம் |
| 19. | முகவுறை | 100 எண்ணம் |

<u>பொருள் எண்:54</u>

கூடலூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் அலுவலகப் பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர்கள் நிரப்பி பொருத்துதல் மற்றும் பிரிண்டர் பழுதுகளை சரிசெய்தல் பணி மேற்கொள்ள 03.08.2023 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | விலைப்புள்ளி தொகை விபரம் | | |
|---|---|---|---|---|
| | | I JET TECH | G TECH RFILLING | UNITEC |
| 1 | 12A Catridge refill | 550 | 625 | 600 |
| 2 | 12 A Drum | 300 | 400 | 350 |
| 3 | 77 A Catridge refill | 550 | 625 | 600 |
| 4 | 77 A Drum | 400 | 500 | 450 |
| 5 | 12 A Mag - Roller | 300 | 400 | 400 |
| 6 | 77 A Mag - Roller | 300 | 400 | 400 |

மேற்காணும் விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஐ ஜெட் டெக், சாமிசெட்டிபாளையம் என்ற நிறுவனத்திற்கு இப்பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:55</u>**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 செல்வபுரம் பகுதியிலுள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள ஒரு கட்டிடத்தின் மேற்கூரையானது மிகவும் சிதலமடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால், பள்ளிக் குழந்தைகள் அமர்வதற்கு வகுப்பறைகள் இல்லாததால் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, அக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும், புதிய கட்டிடம் கட்டவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:56</u>**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 திருமலைநாயக்கன்பாளையம் பகுதியிலுள்ள நகராட்சி துவக்கப் பள்ளியில் உள்ள ஒரு கட்டிடத்தின் மேற்கூரையானது AC Sheet கூரையாக இருப்பதாலும், கட்டிடம் பழுதடைந்துள்ளதாலும் குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி, அக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவும், புதிய கட்டிடம் கட்டவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:57</u>**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கூடலூர் கிராமம் க.ச.எண்.1165/2-ல் உள்ள 1.12 ஏக்கர் பரப்பளவு உள்ள 23 மனைகள் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.CBELPA/JYASWTYD/2023/2023/TCP நாள்.16.10.2023ல் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./கோ(உ.தி.கு) எண்.468/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர்கள் தி/வா சாய்பகவான் பிராப்பர்டிஸ் அண்டு டெவெலப்பர்ஸ் – 1. திரு.ர.செந்தில்குமார், 2. திரு.அ.மணிகண்டன், 3.திரு.ரா.சிவக்குமார் ஆகியோருக்கு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>பொருள் எண்:58</u>

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கூடலூர் கிராமம் க.ச.எண்.1156/3B-ல் உள்ள 1.35 ஏக்கர் பரப்பளவு உள்ள 26 மனைகள் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.CBELPA/PPJ4EBON/2022/2022/TCP நாள்.18.10.2022ல் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./கோ(உ.தி.கு) எண்.365/2022 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர்கள் திரு.அபுதாகீர் என்பவருக்கு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

நகர்மன்ற தலைவர்
கூடலூர் நகராட்சி
கோயம்புத்தூர்–47

**31.10.2023 அன்று நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

| பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 முதல் 24 முடிய | 369 முதல் 392 முடிய | அங்கீகரிக்கப் படுகிறது. |
| 25 | 393 | பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப் படுகிறது. |
| 26 முதல் 58 முடிய | 394 முதல் 426 முடிய | அங்கீகரிக்கப் படுகிறது. |

ஓ.ம் / திரு.அ.அறிவரசு,

தலைவர்

கூடலூர் நகர்மன்றம்

கோயம்புத்தூர்

**// உண்மை நகல் //**

ஆணையாளர்(கூ.பொ)

கூடலூர் நகராட்சி

கோயம்புத்தூர்-47